THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
3. அர்ஜூனன்

ஜூலை
2006
மரம் 6
கனி 8

ஆண்டு சந்தா ரூ. 50/-

தனி பிரதி ரூ. 5/-

## கிறிஸ்துவின் வசனம் மாத இதழின்
## இருபத்துமூன்றாவது வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தநாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு கடலூர் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992முதல்2005 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு

★இருபத்துமூன்றாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை

★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் :** **ஜூலை 29 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி**

**இடம் :** **கிறிஸ்துவின் சபையார்கூடுமிடம் 5, ஆசாரி தெரு,**

**பழைய வண்டிப்பாளையம் கடலூர் (P.O), கடலூர் மாவட்டம்,**

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*

**D.டேவிட் தாஸ்**


***P.P: 954142289256***

**வாருங்கள்! பங்குபெறுங்கள்!! தெரிந்து கொள்ளுங்கள்!!!**




## கிறிஸ்துவின் சபையார் வழங்கும்
## கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி

**உங்கள் WIN TV -யில்**
**ஒவ்வொரு வாரமும் திங்கள்,**
**செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி**
**காலை 6.15 முதல் 6.30 மணி வரை**
**பாருங்கள். மற்றும்**




*செய்தியாளர்*

**B.அர்ஜுனன்**




**உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை 49 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள்.**

**THE WORD OF CHRIST**
**P.O.BOX.5**
**BATLAGUNDU -624 202 S.INDIA**
**Phone: 04543 263278 Cell: 9443558041**

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

**"The Churches Of Christ salute you" Romans 16:16**

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்


**THE WORD OF CHRIST**

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மரம் - 6** **ஜூலை - 2006** **கனி - 8**


ஆசிரியருரை

# நல்லது
# Good



வாழ்க்கையில் நல்லது நடைபெறவேண்டுமென்று நினைக்கிறோம். அதற்கு நாம் சில காரியங்களை செய்யவேண்டியுள்ளது அவைகளைக்குறித்து இச்செய்தியின் மூலமாக தியானிப்போம். எரேமியா தன்னுடைய புலம்பல் புத்தகத்திலே "கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கை யோடு காத்திருக்கிறது நல்லது" என்கிறார் (புல.3:26). காத்திருப்பது என்பது அநேகருக்கு கசப்பாகத் தோன்றும். பிரியமானவர்களே, காத்திராமல் நாம் எதையும் பெறமுடியாது. எடுத்துக்காட்டாக பாருங்கள் நிலத்தில் ஏதோ ஒன்றை விதைக்கிறோம், அது பலன் கொடுக்கும்வரை காத்திருக்கிறோம். இப்படி அநேக விஷயங்களுக்காக காத்திருக்கிறோம். நாம் இரட்சிக்கப்படும்படிக்கு நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டுமா? ஆம், காத்து தான் இருக்கவேண்டும். நான் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு இரட்சிக்கப்பட்டு விட்டேன் இன்னும் நான் ஏன் காத்திருக்கவேண்டும் என்ற ஒரு கேள்வி உங்கள் மனதில் எழும். 'முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்' என்ற வசனத்தை இங்கு நினைவுபடுத்திப்பாருங்கள். இரட்சிப்பு என்பது ஒருமுறை கர்த்தரால் கிடைக்கக்கூடிய ஈவு அதை முடிவுபரியந்தமும் காத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையல்லவா? அப்படி காத்துக்கொள்ளாதிருப்போமானால் இரட்சிப்பை இழக்க நேரிடும். இரட்சிக்கப்படுகிறவர்களை ஜீவபுஸ்தகத்திலே எழுதவும் அதிலிருந்து அவர்களுடைய நாமத்தை கிறுக்கிப்போடவும் கர்த்தர் அதிகாரமுடையவராயிருக்கிறார். ஆகையால் அவருக்குப் பயந்து அவரில் விசுவாசம் கொள்ளவேண்டும். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில்

சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி.11:6). வானத்தையும் பூமியையும் சர்வத்தையும் உண்டாக்கின தேவன் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவராயிருக்கிறார். அவருடைய இரட்சிப்பு தாமதிப்பதில்லை. மனிதனை நம்பி நம்பி அநேகர் மாண்டுபோகின்றனர். அந்த மனிதனைப் படைத்த தேவனிடத்திற்கு ஒருவன் செல்வானேயானால், அவன் மெய்யான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வான். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தராலே வரும் என்று சலொமோன் குறிப்பிடுகிறார். இரட்சிப்பு பரத்திலிருந்து வருகின்ற ஒன்று அது தேவனால் வருகிறது.

பவுல் சொல்வதைக் கவனியுங்கள்: "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2தீமோ.4:7,8). உலகத்திலே நல்ல போராட்டத்தைப் போராடி, ஓட்டத்தை முடித்த பவுல் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் ஆகையால் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் (இயேசு) அந்தநாளிலே அதை எனக்குத் தருவார் என்ற நம்பிக்கையோடிருப் பதாகவும் எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அந்த கிரீடத்தை தந்தருளுவார் என்றும் எழுதுகிறார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ அந்த நம்பிக்கையோடிருக்கிறாயா? விசுவாசத்தைக் காத்துக்கொண்டுள்ளாயா? அல்லது உலக கவலைகளினால் சோர்ந்துபோய் இருக்கிறாயா? சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறார் "கர்த்தருக்குக் காத்திருக்கிறேன்; என் ஆத்துமா காத்திருக்கிறது; அவருடைய வார்த்தையை நம்பியிருக்கிறேன். எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" (சங்.130:5,6). உங்களுடைய காத்திருப்பு இப்படிப்பட்டதாக இருக்கட்டும். அப்பொழுது நலமான காரியங்களை கர்த்தருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்வீர்கள்.

வாழ்க்கையில் மூன்று விதமான பருவங்கள் வருகிறது. ஒன்று குழந்தை பருவம், மற்றொன்று வாலிப பருவம், மற்றொன்று முதிர் பருவம். இதிலே வாலிப பருவம் மிக முக்கியமானது ஏனென்றால் குழந்தை பருவத்திலே மற்றவர்கள் கற்றுக்கொடுக்கக் கேட்கிறோம். வாலிப பருவத்திலே நாமே அநேக முடிவுகளை எடுக்க முற்படுகிறோம். முதிர்ந்த நிலையில் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கிறோம். வேதம் சொல்லுகிறது "தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது" (புல.3:27). சிலர் பிள்ளைகளை பொத்தி பொத்தி வளர்ப்பார்கள். கஷ்டம், நஷ்டம் தெரியாது வளரும் அந்தபிள்ளைகள்

கஷ்ட, நஷ்டங்கள் வரும்போது இரண்டுதரஞ்செத்து வேரற்றுப்போன மரங்களைப்போல வாடிப்போவார்கள். அன்பானவர்களே, இளம்பிராயத்தில் கஷ்டங்களை அநுபவிக்க நாம் அநுமதிக்கவேண்டும். அதன்மூலம் நல்ல பாடங்களைக் கற்றுக் கொள்வார்கள். எனக்கு ஒரு சகோதரியைத் தெரியும் அவர்கள் தன் மகனை எந்த வேலையும் செய்யவொட்டாது வளர்த்தார்கள். ஒரு முறை நான் அந்த வாலிப சகோதரனை அழைத்துக்கொண்டு வேலையில் சேர்க்கும்படியாக பஸ்நிலையம் சென்றோம் அப்பொழுது அவனுடைய தாய் அவனுடைய உடைமைகளை அவனை தூக்க அனுமதிக்காமல் தானே சுமந்து கொண்டு பஸ்நிலையம் வரை வந்தார்கள். அவர்கள் சற்றும் யோசிக்கவில்லை. வேலையில் சேர்ந்தபின் தன் மகனுடைய வேலைகளை யார் செய்வார்? அவனோ நான் வேலையில் சேர்த்துவிட்ட ஒரு வாரத்திற்கு பின்பு வீடு வந்து பின்பு தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணினான். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே உங்கள் பிள்ளைகளை எப்படி நடத்துகிறீர்கள். தேவன் உங்களிடத்திலே முழுபொறுப்பையும் கொடுத்திருக்கிறார். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் உத்தரவாதிகள். அவர்கள் இளம்பிராயத்திலே தனக்கு வரக்கூடிய பாடுகளை சந்திக்க அனுமதியுங்கள். அது அவர்களுக்கும் நல்லது உங்களுக்கும் நல்லது. யோசேப்பை தன்னுடைய சகோதரர்கள் மீதியானியர்களிடம் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அந்த இளைஞனோ எகிப்திற்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்தில் இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். Second Sale செய்யப்பட்டான். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கவலை இருந்ததோ தெரியவில்லை. தன் தேவன்மீது முழு நம்பிக்கையுள்ளவனாக அவருக்கு பயந்தவனாக இருந்தான் என்று வாசிக்கிறோம். இவன் இளம் பிராயத்திலே தனக்கு வந்த பாடுகளை ஏற்று அநுபவித்தபடியினாலே எகிப்திலே உயர்த்தப்பட்டான்.

புதிய ஏற்பாட்டிலே 14 நிருபங்களை எழுதிய பவுல் தன் உடன் ஊழியனாகிய தீமோத்தேயுக்கு எழுதும்போது “நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று” (2தீமோ.4:5) என்றார். பவுல் தன்னுடைய ஊழியத்திலே பட்ட பாடுகளை நாம் அவர் எழுதிய புஸ்தகங்களின் வாயிலாகவும், மற்றும் அப்போஸ்தல நடபடிகளிலேயும் வாசிக்கிறோம். அதை தன் உடன் சேவகனாகிய தீமோத்தேயுவுக்கும் சொல்ல அவர் தயங்கவில்லை. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று என்று எழுதுகிறார். வாலிப சகோதரனே வாலிப சகோதரியே இவ்வசனத்தை நீயும் பற்றிக்கொள். உனக்கு தேவன் அருளிச்செய்த காரியத்தை நிறைவேற்று. பாதியிலே விட்டு ஓடாதே! உனக்கிருக்கிற பெலத்தோடே போ. கர்த்தர் உனக்காக வழக்காடுவார். அவரை நம்பி பற்றிக்கொள். நல்லதே உன் வாழ்வில் நடக்கும் என்ற நிச்சயத்தோடு செல்.

"நான் உபத்திரவப்பட்டது நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன்" என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான் (சங்.119:71). நமக்கு வரக்கூடிய உபத்திரவம் நன்மைக்காகவே இருக்கும் அவைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள்.

நல்லதைப் பெற்றுக்கொள்ள தேவசமூகத்திலே யோபைப்போல அமைதலாயிருந்தால் நலம். "இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்: என் கையினால் என் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன் நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்" (யோபு40:4,5). இந்த யோபைப்போல நாம் கற்றுக்கொள்ளும்படியாக தேவ சமூகத்தில் என்று அமருகிறோமோ? அன்றைய நாளிலிருந்து தான் நலமானவைகளைப் பெற்றுக்கொள்வோம். "பொன்னையும் தங்கத்தையும் பார்க்கிலும் என் பலன் நல்லது; சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் என் வருமானம் நல்லது என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும் அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" (நீதி.8:19-21). தங்கத்தை விரும்பாதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஆண்டி முதல் அரசன் வரை அதையே நாடுகிறார்கள். ஆனால் அதைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்கிறார். பவுன் இருந்தால் அதை அடகுவைத்து நாம் நினைத்த காரியத்தை முடித்துவிடலாம் என்பது 95 சதவீதத்தினரின் அசையாத நம்பிக்கை. கடன் வாங்காமல் காரியத்தை முடிக்க கர்த்தர் உதவிடுவார் என்பது 5 சதவீதத்தினரின் உறுதியான நம்பிக்கை. ஏனென்றால் சுத்த வெள்ளியைப் பார்க்கிலும் அவருடைய வருமானம் நல்லது என்று தாவீது சொல்லுகிறார்: "நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்" (சங்.119:127). அரசர்கள் பொன்னிற்கும், பெண்ணிற்கும் அடிபணிந்தவர்கள். ஆனால் தாவீதின் விருப்பமோ கர்த்தருடைய கற்பனைகளின் மீது! உங்களுடைய விருப்பம் எப்படிப்பட்டது? உலகமும் உலகத்திலுள்ளவைகளும் ஒருநாள் அழிந்துபோய்விடும். "அநேகமாயிரம் பொன்வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்" என்றார் தாவீது (சங்.119:72).

கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடே காத்திருப்பது நல்லது என்றும், தன் இளம் பிராயத்திலே நுகத்தை சுமக்கிறது நல்லது என்றும், பொன்னைப் பார்க்கிலும் என் பலன் நல்லது என்றும் பார்த்தோம்: இவைகளை எல்லாம் எப்படி கைக்கொள்வது? சொல்வது எளிது, ஆனால் அதன்படி நடப்பதோ மிக மிக கடினம் என்று மனது சொல்லும். கவலைப்படாதீர்கள் தாவீதைப்போல "என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி, உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்" (சங்.119:36,37) என்று ஜெபியுங்கள். எல்லாவற்றையும் கிருபையாய் கொடுக்கிற கர்த்தர் அதற்கு வேண்டிய பெலத்தையும் கொடுப்பார்.

# நாம் ஏன் வாரத்தில் முதல் நாளிலே கூடுகிறோம்

## Why We Meet On The First Day Of The Week

*- J.C.Choate*



கர்த்தருடைய சபை அங்கத்தினர்களும், கிறிஸ்தவர்களுமாகிய நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம் என வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). நாம் என்ன செய்துகொண்டிருக் கிறோம் என்பதை புரிந்து கொண்டு உண்மையோடு ஆராதிக்க வேண்டு மென்பது இதன் பொருள். மேலும் நாம் இதை கர்த்தருடைய வார்த்தையின்படி செய்யவேண்டி யவர்களாயிருக்கிறோம். ஆனால் வினாவானது: நாம் அதை எப்பொழுது செய்ய வேண்டும்? மேலும் எப்படிச் செய்ய வேண்டும்? வெள்ளி, சனி ஞாயிறு அல்லது வாரத்தின் வேறு நாட்களில் அதைச்செய்ய வேண்டுமா? ஆராதிக்கும்படி நாம் கூடிவருவது உண்மையாகவே முக்கியமான காரியமா?

பழைய ஏற்பாடு முழுமையும் நாம் வாசிக்கையில் தேவன் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் ஓய்வு நாளை நினைவுகூரவும் அதைப் பரிசுத்தமாய் ஆசாரிக்கவும் வேண்டுமென கேட்டுக்கொண்டாரென நாம் பார்க்கிறோம். இது பத்துக்கட்டளைகளில் ஒன்று (யாத்.20:8-11). ஆனால் நாம் கிறிஸ்துவின் நாட்களுக்கு வரும் போது, கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் பழைய கட்டளையை அல்லது தேவனுடைய ஜனங்கள் ஓய்வு நாளை அநுசரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட கட்டளையை எடுத்துப்போட்டார் என நாம் கற்றுக்கொள்கிறோம் (யோவா.1:17, கொலோ.2:14; எபி.9:15-17). ஆனபடியால், பழைய கட்டளை நீக்கப்பட்டபோது, அது புதிய கட்டளையால் அப்புறப்படுத்தப்பட்டது. அந்த நிகழ்வு உண்மையானது. ஓய்வு நாள் கட்டுப்படுத்தப்படும்படிக்கு ஒழிந்தது. அந்த சமயத்தில் தானே, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் ஆராதனை செய்யும் நோக்கத்தில் கூடி வரும்படி ஒரு புதிய நாளை அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாகும். அதன் படியே ஓய்வு நாள் சனிக்கிழமையில் வந்தது அல்லது வாரத்தின் ஏழாம் நாளில் வந்தது ஆனால் இப்பொழுது அவர் ஆராதனையில் கிறிஸ்துவை முதன்மையாகவும் மற்ற எல்லாவற்றிலும் மேலானதாகவும் வைக்கும்படி நம்மை எதிர்பார்க்கிறார்.

வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு பகுதி வாரத்தின் முதல் நாளைப்பற்றிச் சொல்லுவதற்கு அதிகமான ஆதாரங்களைக் கொண்டிருக்கிறது நாம் இப்பொழுது இந்த நாள் ஏன் மிக முக்கியமானது, மேலும் நாம் ஆராதிக்கும்படிக்கு ஏன் வாரத்தின்

முதல் நாளில் கூடிவரவேண்டும் என்பதற்கு பல காரணங்களைக் குறிப்பிடுவதற்கு நேரம் எடுத்துக்கொள்வோம்.

முதலாவது, கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் உயிரோடெழுப்பப்பட்டார். ஓய்வுநாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இன்னுமிருந்தால் அல்லது தேவனுடைய ஜனங்கள் ஆராதிக்கும்படி இன்னும் கூடிவரவேண்டுமென்று இருந்தால், பின் ஏன் கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் அல்லது ஞாயிற்றுக் கிழமையில் எழுப்பப்பட்டார்? ஓய்வுநாள் ஒரு பரிசுத்தமான நாளாய் இருந்தபடியினால் அந்த நாளில் அவர் உயிரோடெழுப்பப்படாததற்குக் காரணமென்ன என நிச்சயமாக விவாதிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்குமானால், கல்லறையிலிருந்து கிறிஸ்து எழுந்த அந்தநாள் எவ்வளவு அதிகப்பரிசுத்தமாயிருந்திருக்கும்? உண்மையாகவே, அந்த நாள் ஆராதனைக்குரிய புதிய நாளாக இருக்கும்படிக்கே அந்த நாளை முக்கியப்படுத்தும்படிக்கு கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் எழுந்தார். நாம் மத்.28:1க்கு திரும்புகையில், நாம் வாசிக்கலாம், "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்". தொடர்ந்து வாசிக்கையில், அந்த நாளில் கர்த்தர் உயிரோடெழுப்பப்பட்டிருந்ததைப் பற்றி அறிவுறுத்தப்படுகிறோம். நாம் இதே காரியத்தை மாற்கு 16:1,2லும் அதைப்போல லூக்.24:1,2 மற்றும் கடைசியாக யோவா.20:1-லும் வாசிக்கிறோம்.

இரண்டாவது, வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து கிறிஸ்து உயிரோடெழுப்பப்பட்ட பின்பு அவர் தம்முடைய சீஷர்களைச் சந்திக்க இரு வேறு சூழ் நிலைளைப் பொருத்தமானதாகக் கண்டார். இரு நிகள்வுகளுமே வாரத்தின் முதல் நாளிலே நடைபெற்றாகச் சொல்லப்படுகிறது........நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார் அவர் இப்படிச்சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்" (யோவா.20:19,20). மீண்டும் வாசிக்கிறோம், "மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:26-29). இப்பொழுது

இயேசு வாத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து, அந்த நாள் சாயங்காலத்தில் சீஷர்களுக்குத் தரிசனமாகி, எட்டுநாட்களுக்குப் பிறகு மீண்டும் சீஷர்களுக்குத் தரிசனமாகி இருந்தாரென்றால், அவர் மீண்டும் அவர்களை வாரத்தின் முதல் நாளிலே சந்தித்தார் என அர்த்தமாகாதா? வாரத்தின் முதல் நாளின் சிறப்பம்சத்தை பெற்றிருக்கவில்லையென்றால் இந்த அனைத்து சம்பவங்களும் வாரத்தின் முதல் நாளிலே நடந்தேறியதென வேதவாக்கியங்கள் அறிவுறுத்துகின்றன என்று இது புதியதாகத் தோன்றவில்லையா? எப்படியாகிலும் இயேசு வாரத்தின் முதல் நாலிலே கல்லறையிலிருந்து வெளியே வந்து இருவேறு சூழ்நிலைகளிலும் வாரத்தின் முதல் நாளிலே அவர் சீஷர்களை சந்தித்தார் என இந்த நிகழ்ச்சிக்கு ஒரு பெரிய சிறப்பம்சம் இணைந்ததென்று நான் உங்களுக்கு சுட்டிக்காட்டுகிறேன்.

மூன்றாவது, பெந்தெகொஸ்தே நாள் வாரத்தின் முதல் நாளில் வந்தது, பஸ்காவிற்குப் பின் ஐம்பதாவது நாள் அது. அப்போஸ்தலர் 2-ன்படி அப்போஸ்தலர் மேல் பரிசுத்த ஆவியை அனுப்பும்படிக்கும், முதன்முறையாக சுவிசேஷம் அந்த நேரத்தில் பிரசங்கிக்கப்படும்படிக்கும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரட்சிக்கப்படும்படிக்கு என்னசெய்யவேண்டுமென சொல்லும்படிக்கும், அந்தநாளில் சபை ஸ்தாபிக்கப்படும்படிக்கும் கர்த்தர் இந்த நாளைத் தெரிந்துகொண்டாரென அர்த்தமாகிறது. இப்பொழுது வாரத்தின் முதல் நாளில் ஒரு சிறப்பு முக்கியத்துவம் இடம்பெறவில்லையென்றால், என்ன நடந்திருக்கும்? வாரத்தின் மற்ற நாட்களுக்கும் மேலான நாளாக இந்த நாள் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு ஏதோ, சிறப்பான காரணம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டுமென்பது மிக உண்மை. உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தால், பின் ஏன் கர்த்தர் பின்வரக்கூடிய நாளுக்குப் பதிலாக அந்த நாளை அனுசரிக்கும்படி தெரிந்து கொள்ளவில்லை? ஆராதிக்கும்படியான நாளான வாரத்தின் முதல் நாளினால் அந்த ஓய்வு நாள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் கிறிஸ்தவர்களின் காலத்தில் பழையநிலைக்கு மாற்றப்பட்டிருந்தது.

நான்காவது, தேவனை ஆராதிக்கும்படி ஆதி கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடிவந்ததற்கு நாம் ஓர் உதாரணத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் வாசிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப்.20:7) என வாசிக்கிறோம். நாம் இந்தக் குறிப்பை கவனிக்கையில் பவுலும் மற்றவர்களும் வாரத்தின் முதல் நாளிலே சபையோடுகூட கூடிவரும்படிக்கு கப்பல் ஏறி பிலிப்பு பட்டணத்தை விட்டு துரோவாபட்டணத்துக்கு வந்து, அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள் என அறிவுறுத்தப்படுகிறோம். இதன் மூலம் நாம் திட்டமாக காணமுடியம் அதாவது ஏழாம் நாள் அல்லது மற்ற நாள் ஆராதனை நாளாயிருந்திருக்குமானால், அவர்கள் தங்கள் கூட்டத்தோடுகூட அங்கிருந்த

கிறிஸ்தவர்களுடன் ஆராதனையை நடத்தியிருந்திருக்கலாம் அதன்பின் தங்களுடைய பிரயாணத்தைத் தொடர்ந்திருந்திருக்கலாம். மாறாக, கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி நியமித்திருந்த அந்த நாளில் ஆராதிக்க வேண்டுமென வாரத்தின் முதல் நாள் வரும்வரைக்கு அவர்கள் காத்திருந்தார்கள். அதன் பின் எந்த நாளில் என்ன நடந்தது? அந்த காரியத்திற்காக சீஷர்கள் அந்த நாளில் கூடி வந்தார்கள். ஏன் அவர்கள் கூடிவந்தார்கள்? அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என வேதம் கூறுகிறது. மேலும் அவர்கள் கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவுகூரும்படிக்கு கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளும்படி கூடி வந்தார்களென இந்நிகழ்ச்சிக்கு ஆதாரத்தைக் கொண்டிருக்கிறது (1கொரி.11:23-29). அதன் பொருள், வேதாகம உதாரணத்தின் மூலம், கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படி கூடிவந்த நாள் வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளே. ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாக இருந்த பழைய ஏற்பாட்டுக் காலத்திற்குத் திரும்புங்கள். தேவன் ஒவ்வொரு ஓய்வுநாளையும் அவர்கள் நினைவுகூரும்படி சொல்லவில்லை. ஆனால் ஓய்வு நாளை நினைவுகூரும்படி மாத்திரம் சொன்னார். அவர்களுக்கு அந்த நாளை நினைவுகூரவேண்டுமென்பது அவர்கள் எல்லாவற்றையும் அல்லது ஒவ்வொரு ஓய்வுநாளையும் நினைவுகூரவேண்டுமென்பதாகும்.

வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்வது பற்றிய விஷயத்தில் இதே காரியம் உண்மையே. அந்த கூட்டத்தில் அவர்கள் சில போதனைகளைப் பெற்றிருந்தார்கள். வேதவாக்கியம் பவுல் போதித்தார் எனவும் தன்னுடைய போதனையை நடுராத்திரிவரை தொடர்ந்தார் எனவும் கூறுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள் அல்லது பாடல் பாடுவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ மேலும் இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்றோ இது சொல்ல வில்லை. ஆனால் பவுலும் மற்ற கிறிஸ்தவர்களும் அந்த நாளில் கூடி வாரத்தின் முதல் நாளில் அப்பம் பிட்டு தேவனை ஆராதித்தார்கள். அப்படியென்றால் நாம் கிறிஸ்தவர்களாயிருந்தால், நாமும் அதே காரியத்தைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம் என்றே பொருள்படுகிறது.

ஐந்தாவதாக, பவுல் தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே ஏதாகிலும் சேர்த்துவைக்க வேண்டும் அல்லது தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுக்க வேண்டுமென அங்கே கட்டளையிட்டார் என வாசிக்கிறோம். "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக் கடவன்" (1கொரி.16:1,2) என வாசிக்கிறோம். இங்கே கலாத்தியா மற்றும் கொரிந்துவிலிருந்த இரு சபைகளுக்கு வாரத்தின் முதல் நாள்தோறும்

கொடுக்க அல்லது சேர்த்துவைக்கும்படி அறிவுறுத்தியிருக்கிறார். கொடுக்கும் மனநிலையைப் பற்றியும், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்பது பற்றியும், கொடுக்கும் நோக்கத்தைப் பற்றிச்சொல்லுவதற்கு அதிகமதிகமான ஆதாரங்கள் உண்டு. ஆனால் கொடுக்கும் செயல் வாரத்தின் முதல் நாள் தோறும் நடைபெற வேண்டியிருந்தது என்று இங்கே நாம் காண வேண்டியது முக்கியமான காரியமாகும். ஆச்சரியம் மற்ற நாளில் கொடுப்பதற்குப் பதிலாக வாரத்தின் முதல் நாளில் செய்யப்படவேண்டியது ஏன்? ஏனென்றால் கிறிஸ்தவர்கள் ஆராதிக்கும்படி கூடிவரவேண்டிய வேதாகமத்தின் நாளானது இந்நாளே என்பது தெளிவாயிருக்கிறது. மேலும் அவர்கள் கூடிவந்திருந்த சமயத்தில், தங்களுடைய வருமானத்திலிருந்து கொடுப்பதற்கு அது ஒரு சிறந்த நாளாகவும் இருந்திருக்கும். அதே காரியம் தான் இன்றும் நடக்கிறது.

இவையெல்லாவற்றையும் சுருக்கமாகச் சொல்ல, வாரத்தின் முதல் நாள் ஒரு பரிசுத்த நாளல்ல, ஓய்வுநாளை அநுசரிக்கப்பட்டது போல அது ஒரு ஓய்வுநாளல்ல, நிச்சயமாக இது ஓய்வுநாளல்ல, ஆனால் இது கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் மகிமைப்படுத்தப்பட்ட நாள் மேலும் பரிசுத்த ஆவியின் வருகைக்கென்றும், முதல் முறையாக உண்மையிலே சுவிசேஷம் போதிக்கப்படுவதற்கென்றும் மேலும் சபை ஸ்தாபிக்கப்படுவதற்கென்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நாள் இது. இது மாத்திரமல்ல, இந்த நாள் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி ஆராதிக்கும்படி தெரிந்தெடுத்த நாளாயிருந்தது. இப்படியிருக்கிறபடியினால் இது ஆராதனைக்குரிய வேதாகம நாள். நாம் புதியஏற்பாட்டில் வைக்கப்பட்டுள்ள திருஷ்டாந்தங்களைப் பின்பற்றவும், தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரும்படிக்கும் தவறிழைக்கமாட்டோம். தவறு அந்தநாளில் கூடிவருவதை புறக்கணிக்கச் செய்யும். எபிரெய எழுத்தர் சபை கூடிவருதலை விட்டு விலகக்கூடாதென்று நம்மை உற்சாகப்படுத்துகிறார் (எபி.10:25). இது கிறிஸ்தவர்களாயிருக்கிற நமக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடிவரும் சந்தர்ப்பத்தோடே மகிமைப்படுத்தவும் அந்த நாளில் ஆராதிப்பதின் மூலம் நமது கர்த்தரை துதிக்கவும் அவர் நமக்கு ஏற்படுத்தியிருக்கிற இந்த நோக்கம் எவ்வளவு அற்புதமானது!


நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக மற்ற கிறிஸ்தவர்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவருகிறீர்களா? இல்லையென்றால், நீங்கள் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவும் நாங்கள் ஜெபிக்கிறோம். இதை நீங்கள் செய்வீர்களென்றால், கர்த்தர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்வார். அப்போஸ்தலர் 2 ஐ வாசித்துப்பாருங்கள். அவர்கள் அதைச் செய்யதார்களென்றால். நீங்கள் அதைச் செய்வீர்களென நாங்கள் ஜெபிக்கிறோம்.

பெண்கள் பகுதி

# தேவன் ஒருவர் இருக்கிறாரா?

# *Is There A God?*

*- Betty Burton Choate*



நான் காலையில் தேவப் பிரசன்னத்தின் உணர்வோடு எழுந்தேன். நான் தூங்கின போது அவர் தொடர்ந்து கவனமாய் பார்த்துக்கொண்டார் மேலும் அவருடைய முழுக்கவனத்தையும் எதிர்பார்த்த என் வாழ்க்கையின் எல்லா பாகங்களிலும் அன்பு செலுத்தி, பராமரித்து வந்தாரென என்னுடைய இருதயத்தின் வார்த்தைகள் அவருக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்தன.

சாத்தான் என் மூளையின் வழியாய் ஒரு எண்ணத்தை விதைக்கிறான். "நீ தேவனைப் பார்த்திருக்கவில்லை. ஒருவேளை அவர் இருந்தால், நாத்திகர் சொல்வது போல, உன் சிந்தையில் உதித்த ஒரு ஆதாரம் மட்டுமே. பிறகென்ன?

முழுமனதில் கபடில்லாதிருக்கவும் திறந்த மனதுடனிருக்கவும், நான் அந்த எண்ணத்தை பரிசோதிக்கிறேன். பிறகென்ன?

என் இருதயத்தில் வெறுமை உள்ளது. தேவனை நோக்கி நான் செலுத்தியிருந்த மனமார்ந்த அன்பு இதில் உலர்ந்துபோகிறது. பாதுகாப்பான என் உணர்வு மறைகிறது. நான் இதற்கு மேல் வாழ்விற்கான நங்கூரத்தையும் உறுதியையும் கொண்டிருக்கவில்லை. நான் மொத்தத்தில் எங்கே சென்று கொண்டிருக்கிறேன் என்பது பற்றிய அறிவு கொஞ்சமுமில்லை.

என்னுடைய சிந்தையில் என்னைக் காட்டிலும் பெரிதானதொன்றுமில்லை, இன்றைய சரீர ஜீவியத்திற்குரிய தேவைகளைக் காட்டிலும் பெரிதான நோக்கமில்லை- ஏனென்றால் நாளை ஒருவேளை வராது, தொடுவானத்தில் நித்திய வாழ்வு இல்லை, - வெறுமை, அதன்பின் பயம் மற்றும் எனது மனதின் ஒவ்வொரு பிளவிலும் பயனற்ற வெள்ளம்.

இதைவிட தேவனில்லாமல், இது மிகக்கேட்டிலும் அதிகம் "ஒன்றும் மிஞ்சவில்லை". இது, நான் இன்னும் வாழ்கிறேன் மேலும் உலகத்தின் எல்லா சவால்களும் இன்னும் வாழ்கின்றன மேலும் நான் எவ்வித உதவியையும் பெற்றிருக்கவில்லையென மரித்துப் போன நிகழ்வை ஏற்றுக்கொள்வதுடன் இன்னும் இந்த வாழ்வை நான் தைரியமாய் எதிர்த்து நிற்கிறேன். இந்த பீதியான நினைவை மாற்றுவதைக் காட்டிலும் பெரியது வேறொன்றுமில்லை". உன்னதமானவரிடத்தில் விசுவாசத்தை இழந்தவர்களுக்கு தொடுவானத்தில்

தற்கொலை நேரிடக் காத்திருப்பதில்லை என நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஆனால் ஒரு உறுதியான எண்ணம் தனிமைபயத்தினை துளைத்துவிடுகிறது. "ஆம், நீ வாழ்ந்திடு உன்னைச் சுற்றியுள்ள வாழ்வின் எல்லா அதிசயங்களும் காண்கின்ற உலகத்தின் அதிசயங்களும் வாழ்கின்றன. ஒரு கணவனின் இழப்பு அல்லது பெற்றோருடைய இழப்பு அல்லது ஒரு குழந்தை, நீ பார்த்திருப்பவற்றின் இழப்பு உன்னுடைய மிகப்பெரிய நாசமாயிருக்காது. நீ தேவனைக் கண்டிராத போது இழப்பது தான் மிகப்பெரிய நாசமாயிருக்கும். உன்னுடைய இருதயத்தில் இந்த நிகழ்வுகளின் பரிபூரணத்துவம் சாத்தானுடைய பரிகாசத்தோடும் சந்தேகத்தைத் தூண்டும் செயலோடும் பேசுகிறது. மனிதருடைய மனதில் கனவில் உதித்த ஒரு ஆதாரமாக மட்டும் தேவன் இருந்திருப்பாரானால், மனிதனது 'முன்னேற்றம்' மற்றும் 'உண்மையற்றசெயல்' போன்ற எல்லாவற்றிலும் மனிதத்தன்மை தேவனிலுள்ள பழைய வழக்கமான நம்பிக்கையை வளர்ச்சியடையப் பண்ணியிருக்காதா?

ஆனால் மனித சமுதாயத்தின் உள்ளான ஆத்துமா ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கதறுகிறது (சங்.27:7-10).

இன்றும்கூட, இரண்டு வகையான ஜனங்கள் உலகத்தில் இருக்கின்றனர்: விசுவாசிகளை விட தேவனை மறுதலிக்கிற உணர்வினையுடையவர்களும் (நடக்கையிலும் மனக்கிலேசத்திலும்) பிரச்சனை விகிதம் அதிகமுள்ள, தற்கொலை விகிதம் அதிகமுள்ள புள்ளிவிவரத்தை உடையவர்கள் சிலராக இருக்கின்றனர்.

இதற்கு எதிர் வரிசையில் உள்ளவர்கள் அநேகராகிய விசுவாசிகள். சிலரில் உருவாகிறது அல்லது வேறொன்றில், அவர்கள் ஜீவனுள்ள தேவனிடத்தில் பயபக்தியோடுகூடிய உணர்வோடு உண்மையாக ஒட்டிக்கொண்டுள்ளது. அவர்கள் தேவனைப் பற்றிய தங்களுடைய அறிவில் சத்தியத்திலிருந்து ஒரு கோடி மைல் தொலைவில் இருக்கலாம், ஆனால் அவர்களுடைய இருதயங்கள் தேவன் ஒருவர் உண்டு என உறுதியாயிருக்கிறது.

இருதிறத்தாருடைய மனதில், அடிப்படைகாரணி தேவனோடு இடைபடுகிறது! சில ஜனங்கள் மறுதலிக்கும் அவஸ்தையில் இருந்தபோதிலும் வேறெந்த ஒரு விஷயமும் இப்பேர்பட்ட தகுதியையும் ஒட்டுமொத்த முன் அனுபவத்தையும் உரிமை பராட்ட முடியாது இந்த உண்மை ஒன்றுமட்டுமே இறுதியாக பேசுகிறது. தேவன் இல்லாதிருந்தால், யாருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட்டுள்ளோம், பெற்றோருக்கு காணாமல் போன ஒரு குழந்தையைப் போல யாரை நோக்கி நம்முடைய ஆவிகள் கதறுகிறது, இந்த பிரபஞ்சம் மற்றும் அவரிடத்திற்கு எட்டாத தொடர் தூரமும் பல வருடங்களாக இருந்துவருகின்ற யுகத்திற்கு மேலாக வளர்ச்சியடைந்திருக்கும்.

இன்னொரு எண்ணம் மனதிற்கு வருகிறது: ஏதோ சாத்தானை நான்

ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவன் இருக்கின்றான் என்பது பற்றி சந்தேகமில்லை. ஏன்? முதல் காரணம்: பாவம் மற்றும் தீமையாக எப்பொழுதும் அவனுடைய கிரியைகளை சுற்றிலும் என்னால் காணமுடிகிறது. அதன் விளைவாக அழிவு தன்னுடைய பங்கை நிறைவேற்றுகிறது. இரண்டாவது காரணம்: சாத்தானுடைய தந்திரங்களுக்கு எதிர்ப்பைக்காட்டுவதில், தேவன் நம்முடைய எண்ணங்களின் மூலம் சாத்தான் தொடர்ச்சியாக இருக்கின்றான் என்பதைக் குறித்த சரமாரியான கேள்விகளையும் சந்தேகங்களையும் விவரிக்கிறதில்லை! தேவன், தாமே, சாத்தான், கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல எவனை விழுங்கலாமோ என்று பூமிமுழுவதும் சுற்றித்திரிகிறான் என நம்மிடம் சொல்லுகிறார் (1பேது.5:8). தேவன் சாத்தானின் உண்மையான நிலையை அறிந்து நம்முடைய விசுவாசத்தை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்கிறார் - ஏனென்றால் அவர் உண்மையுள்ளவர் - தேவன் நாம் முன்னெச்சரிக்கையாய் இருக்கும்படி விரும்புகிறார் அப்போது தான் நம்முடைய தற்காப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கும்.


சாத்தான் இருக்கின்றான் என்பதற்கு உலகத்தில் தீமையானது வினாவற்ற சாட்சியாக எங்குமிருக்கிறபடியினால், இக்காரணத்தினால் இதைப் பின்பற்றுகையில் இது அவித்துப்போடக்கூடாத நன்மையல்ல, மாறாக, தேவன் இருக்கின்றார் என்பதற்கும் ஆதாரமிருக்கிறதல்லவா? மேலும் சாத்தான் பொய்யுக்குப் பிதாவாயிருக்கிறான் என தேவன் நம்மை முன்னெச்சரிக்கிறபடியினால், தேவனுடைய எதிராளி தொடந்து சந்தேகத்தைத் தூண்டுகிறவானாயிருப்பான் என நாம் எதிர்பார்ப்பதில்லையா? (யோவா.8:44)

"நான் தூங்கினபோது உம்முடைய ஜாக்கிரதையான பராமரிப்பிற்காகவும் என்னுடைய கண்விழிப்பின் போது என்னை உற்சாகப்படுத்தும் ஒரு ஜீவனுள்ள நம்பிக்கைக்காகவும் உமக்கு நன்றி பிதாவே"


> நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. ......நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்பிவிக்கத்தக்கவன் இல்லை........" - ஏசா.43:11-13.


**கிறிஸ்துவின் வசன மாத இதழ்**

தேவைப்படுவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு இன்றே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் தொளிவான முகவரியுடன் எழுதியனுப்பவும்.



The Editor
The Word of Christ
Post Box No.5
Batlagundu - 624 202
S.INDIA



பாடம் - 6

# பெண் போதகர்கள்
# Women Teachers

**J.C.Choate**

இந்தத் தொடர் பாடங்களை நாம் படிப்பதற்கான நோக்கம், இன்றைக்கு தேவன் அவருடைய சபையில் எந்த விதமான தலைவர்கள் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை அறிந்து கொள்ளவே. தேவனுடைய சித்தத்திற்கு மாறாக அலுவல்களையும் பொறுப்புகளையும் உருவாக்குவதில் நமக்கு விருப்பமில்லை. நாம் செய்யும்படியாக தேவன் நமக்குக் கொடுத்த வேலைகளை அவர் எந்த விதமாக செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறாரோ அந்த விதமாகவே செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அது அவருடைய விருப்பத்திற்கு விரோதமானதாகிவிடும்.

ஒவ்வொரு சபையிலும் அங்கத்தினர்களை நடத்துவதற்கு மூப்பர்களும், உதவிக்காரர்களும் வேண்டுமென்று தேவன் சொல்லியதைப் பார்த்தோம். அப்படியென்றால் சபையில் தகுதியுள்ள ஆண்கள் (சகோதரர்கள்) இருந்தால் இந்த பதவிகளுக்கு அவர்களை நியமிக்கலாம் அப்படியில்லாவிட்டால் தகுதியுள்ள வர்களை நியமிக்கும்வரை சகோதரர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்பட வேண்டும். மேலும் மூப்பர்களின் கீழ் பிரசங்கியார்களும், போதகர்களும் மற்ற அங்கத்தினர்களோடு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதிலும் போதிப்பதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

இந்தப் பாடங்களை நிறைவு செய்த பின்பு சபையில் பெண்கள் நடத்துனர்களாகவும், போதகர்களாகவும் இருப்பதைக் குறித்து பார்க்கலாம். கடந்த பாடத்திலே பெண்கள் எப்படி தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யலாம், பிள்ளைகளுக்கு வகுப்புகளிலே போதிக்கலாம், மேலும் மற்ற ஸ்திரீகளுக்கு (பெண்கள்) வகுப்புகளிலே போதிக்கலாம் என்பதைக் குறித்து வேத வசனங்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பார்த்தோம். இப்படி செய்வதன் மூலம் அவர்கள் ஒரு தலைமைத்துவப் பொறுப்பை எடுத்துக் கொண்டாலும், அது மூப்பர்கள் மேற்பார்வையிலேதான் நடக்கும்.

சபையிலே ஸ்திரீகள் அமைதலாக இருக்க வேண்டும் என்று வேதம் தெளிவாகப் போதிக்கிறது. 1 கொரிந்தியர் 14:33-35 “தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமதானத்திற்கு தேவனாயிருக்கிறார்; பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலும் அப்படியேயிருக்கிறது. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்ககடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே”. மற்றும் 1தீமோத்தேயு 2:11-12 “ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடைய வளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும்,

புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்". இந்த வசனங்களில் சொல்லுவதை எல்லாம் பார்க்கும் போது அதிலே சொல்லப்பட்டிருக்கிற மையக்கருத்து என்னவென்றால் புருஷர்கள் மீது ஸ்திரீகள் அதிகாரஞ்செலுத்தக் கூடாது என்பதே. ஆண்களும் பெண்களும் கலந்து இருக்கிற சபையிலே அவர்கள் பிரசங்கிக்கவோ போதிக்கவோ கூடாது. மாறாக ஒரு வகுப்பிலே சபையினுடைய ஆண் அங்கத்தினர் ஒருவர் போதித்துக் கொண்டிருக்கும்போது ஒரு சகோதரியை ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்படி அழைக்கலாம், அல்லது அவர்கள் ஒரு கேள்வி கேட்க விரும்பினால் கேட்கலாம்.

எந்த சந்தர்பத்திலும் ஸ்திரீயானவள் புருஷனுடைய அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளவோ, அல்லது கட்டுப்படுத்தவோ கூடாது. அவள் தன்னுடைய கணவனுக்கோ, பெற்றோர்களுக்கோ கட்டுப்பட்டவளாக இருக்கிறாள். பொதுவான இடங்களில் தொழுகை நேரத்தில் மற்றவர்களோடு சேர்ந்து பாடலாம். ஆனால் பாடலை நடத்தவோ, அல்லது தனியாகப் பாடவோ கூடாது. மாறாக தொழுகின்ற மற்ற யாவரோடும் சேர்ந்து தேவனைத் துதித்துப் பாடலாம். அப்படிச் செய்வதன் மூலம் எந்த வழியிலும் புருஷனுடைய அதிகாரத்தைப் பறித்துக்கொள்வதாகவோ, புருஷர்கள் மீதோ அல்லது சபையினுடைய தலைவர்கள் மீதோ அதிகாரம் செலுத்துவதாகாவோ ஆகாது.

இயேசுவானவர் அப்போஸ்தலர்களை அழைத்தபோது மத்தேயு 10-ல் சொல்லப்பட்டபடி ஆண்களை மட்டுமே அழைத்தார். சுவிசேஷம் உலகமெங்கும் கொண்டு செல்லப்படவேண்டும் என்ற அந்தக் கட்டளையை அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுத்தார் (மத்தேயு 28:18-20). நீங்கள் அப்போஸ்தல நடபடிகள் அல்லது புதிய ஏற்பாடு முழுவதையும் படித்துப் பார்த்தால் பொதுவான எந்த இடத்திலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும், பெண்கள் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள் என்று காண முடியாது. கிறிஸ்தவ பெண்கள் பிராந்திய சபைகளிலே மூப்பர்களாகவோ, உதவிக்காரர்களாகவோ சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது கிடையாது. இன்றைக்கு மத சம்மந்தப்பட்ட உலகிலே பெண்கள் பிரசங்கிகளாகவும் சில சபைகளின் அமைப்பிலே பங்கேற்பவர்களாகவும் இருக்கிறார்கள் ஆனால், கிறிஸ்துவின் சபை, கர்த்தருடைய ஒரே சபையிலே இப்படிப்பட்ட நிலையை நீங்கள் காண முடியாது. அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுமானால் அந்த சபை அல்லது சபைகளை நீங்கள் குறித்துக் கொண்டு அவைகள் சத்தியத்தை விட்டு விலகி சென்று விட்டதாகச் சொல்லலாம். பொது இடங்களிலே பிரசங்கிக்கிற அல்லது சபையிலே நேரடியாக பொறுப்புகளை எடுத்துக் கொள்கிற ஸ்திரீகள் நேரடியாக வேதத்திற்கு முரண்படுகிறார்கள். அப்படியென்றால் ஸ்திரீகள் குறைவானவர்களா? தேவன் அவர்களை விட்டுவிட்டாரா? அவருடைய சபை புருஷர்களின் தேவைகளை மட்டுமே சந்திக்கின்றதா? மேலும் புருஷர்களுக்கு ஸ்திரீகள் மீது மேலான பதவி கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஸ்திரீகள் சபையிலே அப்பொழுது இரண்டாம் தர கிறிஸ்தவர்கள் என்று அர்த்தமா, இரண்டாம் தரம் அல்லது அவர்களுக்கு சபையிலே

தலைமைத்துவம் என்று சொல்லும்போது தரமே இல்லை என்று பொருளா? இல்லை, இவைகளில் எதுவும் உண்மையில்லை. உண்மை என்னவென்றால் தேவன் ஆண்களுக்கு குறிப்பிட்ட வேலைகளும் பெண்களுக்கும் கூட குறிப்பிட்ட சில வேலைகளும் கொடுத்திருக்கிறார். ஏன் இருவரும் ஒருவருடைய வேலையை ஒருவர் எடுத்து கொண்டு செய்ய வேண்டும்? இரு பாலருக்கும் சபையிலே முக்கியமான வேலைகள் உண்டு. தேவன் அவரவர்களுக்குக் கொடுத்த வேலைகளைச் செய்தால், அவர்கள் தேவனுக்கென்று பெரிய வேலைகளைச் செய்வார்கள், அங்கே இசைவும், சமாதானமும் இருக்கும். எப்படியிருப்பினும் சாத்தான் இவர்களுக்குள் புகுந்து சில புருஷர்கள் ஸ்திரிகளையும் தூண்டிவிட்டு இதைப் பெரிய பிரச்சனையாக்கி ஒருவர் வேலைளை ஒருவர் ஏன் செய்யக் கூடாது என்று கேட்க வைப்பான், உண்மை என்ன வென்றால் தேவனுக்கு மிக நன்றாகத் தெரியும் அவருடைய வழி சரியானது மட்டும் அல்ல, அதுவே மிகவும் சிறந்ததும் ஆகும். நீங்கள் வேதாகம சரித்திரத்தை சற்று கவனித்துப் பார்த்தால் பழைய ஏற்பாட்டு காலத்திலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும் மிகப் பெரிய ஸ்திரீகள் இருந்திருப்பதைக் கவனிக்க முடியும். இன்றைக்கு பெண்கள் செய்ய வேண்டிய பெரிய வேலைகள் உண்டு அவர்கள் விரும்புவதைக் காட்டிலும், அது பெரியதாகவும் இருக்க முடியும் எப்போதென்றால் தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கிற வழிமுறைகளுக்கு உட்பட்டு அவர்கள் செய்யும்போது. புருஷர்கள் விஷயத்திலும் இதுவே உண்மை. ஸ்திரீகளும் புருஷர்களும் பொதுவாக அவர்கள் சக்தியிலிருந்து மிகவும் பின்னிட்டுப்போய்விடுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களைக் கட்டுப்படுத்தி செயல்பட்டாலும் தங்களுக்கென்று எல்லைகளை வகுத்துக்கொண்டு, தங்களைச் சுற்றி தடைகளை உருவாக்கிக் கொண்டு தங்கள் வாழ்வில் விசுவாசமில்லாத ஒரு நிலையை வெளிப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் ஸ்திரீகள் தங்களால் மற்ற பெண்களுக்குப் எவ்வளவு போதிக்க முடியுமோ, சிறுவர்களுக்கும், வாலிபப் பெண்களும் எவ்வளவு போதிக்க முடியுமோ தனிப்பட்ட முறையில் எவ்வளவு ஊழியம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்ய வேண்டுமென்று அனுமதிக்கிறார். அவர்கள் செய்யக்கூடிய எண்ணற்ற நற்கிரியைகள் உண்டு.

வியாதியஸ்தர்கள், வயதானவர்கள், அனாதைகள் மற்றும் தேவையுள்ளவர்களை கவனிக்கலாம். கிறிஸ்துக்குள் நம்முடைய சகோதிரிகள் சிலர் முயற்சித்து போதிப்பதிலும் பிறருக்குச் சேவை செய்வதிலும் பெயர் பெற்றவர்கள், நிச்சயமாகவே ஒவ்வொரு நல்ல மூப்பர், உதவிக்காரர், பிரசங்கியார் அல்லது தேவ ஊழியர்களுக்கு மிகவும் தேவபயம் உள்ள ஸ்திரீகள் இருந்திருக்கிறார்கள். தேவன் தான் கொடுத்த வேலையை செய்வதற்கு அப்படிப்பட்ட ஸ்திரீகள் நமக்கு இன்னும் நிறையத் தேவை, இது கூடுமானால் கர்த்தருடைய சபை முன்பிருந்ததைவிட சிறப்பாக வளரும்.

மற்ற ஸ்திரீகளோடு சேர்ந்து ஸ்திரீகளுக்கு போதிக்கவும், தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்யவும் மேலும் இது போன்ற நற்கிரியைகள் செய்யும் பெண்கள் நம்மிடம் நிறைய இருக்கின்றார்களா? ஆம், இப்படிப்பட்டவர்கள்

நம்மிடம் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கர்த்தருடைய சபையில் விடுபட்டவர்கள் என்று குறைச் சொல்லவோ குற்றம் சாட்டவோமாட்டார்கள்.

இப்படிப்பட்ட சேவையும் அதிலே உள்ள சவாலான அதிக ஈடுபாட்டையும், கிறிஸ்தவ சகோதரிகளாகிய நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன். நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் அப்படி ஆகும்படி அதிகமாய்க் கேட்டுக் கொள்கிறேன், நீங்கள் கிறிஸ்துவிலே விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்றால் அவர் உங்களை இரட்சிப்பார் (மாற்கு 16:16).

## பேசும் வேதாகமம் — 20

★ மரித்தோர் உயிரோடெழுந்திருக்கும் போது எதுவும் எதுவும் இல்லை? - கொள்வனையும் கொடுப்பனையும் - மாற்கு12:25.

★ அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தவன் யார்? - அப்பொல்லோ - அப்.18:24.

★ எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே யார் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறது? - உங்கள் - ரோம.2:24.

★ விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் எது பெரியது? - அன்பு - 1கொரி.13:13.

★ நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் எதற்குட்பட்டிருக்கிறார்கள்? - சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள் - கலா.3:10.

★ கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் என்ன செய்யுங்கள்? - மன்னியுங்கள் - எபே.4:32.

★ நம்முடைய அற்பமான சரீரத்தை நம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக என்ன செய்வார்? - மறுரூபப்படுத்துவார் - பிலி.3:21.

★ உங்கள் வசனம் எப்பொழுதும் எது பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருக்க வேண்டும்? - கிருபை - கொலோ.4:6.

★ ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் எது உண்டாகும்படி செயல்படவேண்டும்? - பக்திவிருத்தி - 1தெச.5:11.

★ ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் என்ன செய்யவுங் கூடாது? - சாப்பிடவும் - 2தெச.3:10.

## ஜெபியுங்கள்

✦ *கடலூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள 23வது வாசகர் கருத்தரங்கிற்காக ...*

✦ *இலங்கை சமாதானம் அடைய ...*

✦ *கர்த்தர் ஜே.சி.சோட் அவர்களுக்கு கொடுத்த சுகத்திற்காக ...*



# கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சிப் பாடங்கள்

- ★ சகோ. ஜே. சி. ஜோட் அவர்கள் எழுதியது
- ★ சகோ. ஜி. டானியேல் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது
- ★ கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மாதம் வெளிவர இருக்கிறது
- ★ உங்கள் பிரதிக்கு முந்துங்கள்
- ★ ஊழியர்களுக்கான கையேடு இது
- ★ ஒரு சபைக்கு ஒரு பிரதி மட்டுமே
- ★ உங்களுடைய சபை மற்றும் உங்களுடைய தெளிவான முகவரி தேவை
- ★ தபால் செலவுக்காக ரூபாய் 10 அனுப்புங்கள்

குறிப்பு: இப்பிரதியைப் பெற்று உங்களுடைய இடத்திலே மெய்யான புதிய ஏற்பாட்டு திருச்சபையை உருவாக்கலாம்.


தொடாபுக்கு: தி வேர்ட் ஆப் கிரைஸ்ட், த. பெ. எண் 5, வத்தலக்குண்டு – 624 202 தமிழ்நாடு, இந்தியா.

ஆண்டவர் இயேசுவுக்கு ஊழியம்
செய்ய இதோ ஓர் அருமையான வாய்ப்பு

**வத்தலக்குண்டு வேதாகம கல்லூரியில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது**

**கல்வி தகுதி: 10th அதற்குமேல்**

உங்களைப் பற்றிய முழுவிபரத்துடன்
தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி






நிர்வாகி
வத்தலக்குண்டு வேதாகம கல்லூரி
தபால் பெட்டி எண்:5
வத்தலக்குண்டு - 624 202

**Mobile: 9443 558041**

யோவான்12:26

## நான் ஒரு கடனாளியாயிருக்கிறேன்

# I am a debtor

*-Roy Dunavin*


**"நான் ஒரு கடனாளியா யிருக்கிறேன்...**

**நான் பிரசங்கிக்க விரும்பு கிறேன் .....**

**நான் வெட்கப்படவில்லை ....." (ரோமர்1:14-16)**

பவுல் "ஒருவரிடத்தி லொருவர் அன்புகூருகிறகடனே யல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்" (ரோம.13:8) என்றார். பவுல் தேவனுடைய கிருபை தன்மேல் பொழிந்தருளினபடியால் திரும்ப செலுத்தக் கூடாததென நித்தியக் கடனாகிய அன்பை அடையாளப் படுத்துகிறார். அவன் நம்பிக்கையற்ற வனாகவும் இழந்து போனவனாகவும் அடையாளப்படுத்துகிறான்" நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோம.7:24). "தேவனோ இரக்கத்தில் ஐசுவரிய முள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; (கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே.2:4.5). இதை அறிந்துகொள்ளுகிற எந்த மனிதனும் இதே கடமையை உணர்வான். அவன் பவுலுடனேகூட சேர்ந்து, என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி.9:16) என்பான். தேவன் பவுலை ரோம.7-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சேற்றின் நடுவிலிருந்து தூக்கியெடுத்து இப்பொழுதோ ரோமர் 8-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள நிலைமைக்கு அவனை உயர்த்தி யிருந்தார். தேவன் அவனை புத்திர சுவிகாரமாக்கி யிருந்தார், நீதிமானாக்கி யிருந்தார், அவனை ஒருபோதும் பாவம் செய்யாதிருந்தவனைப்போல மாற்றி அவனுக்குத் தம்முடைய சித்தத்தை அறிவித்து சுயாதீனத்தை கொடுத்து அவனை பரலோக ராஜ்யத்தின் பிரஜையாக்கி தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவனை முத்திரித்திருந்தார்.

தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் இதே ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். நாம் நம்முடைய முன்னான நிலைமையை இப்போதைய நிலைமையிலே இருந்து கொண்டு எதிர்ப்போமானால் பவுலோடு சேர்ந்து நாமும், "நான் ஒரு கடனாளியாயிருக்கிறேன், நான் பிரசங்கிக்க விரும்புகிறேன் என்று சொல்வோம்"



## வேதஅறிவுப்போட்டி எண் 70–ல் வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| J.ஜாய் வாசுகி | -செட்டிபாளையம் | G.P.ஏசையன் ராஜ் | -கோபி |
| P.முத்து | -பொன்னபுரம் | G.பூங்கோதை | -வெ.பாளையம் |
| S.ஸ்டீபன் | -காங்கயம் | E.ஜோசப் தேவதாஸ் | -நாகமலை |
| J.S.நிர்மலாஜான் | -மதுரை | N.கமலவேணி | -சென்னை |
| K.அன்பழகன் ஹெலன் | -நாகை | A.ரீட்டா | -வண்டிபெரியார் |
| P.S.லலிதாபிரேமகுமாரி | -மதுரை | S.ஆனந்தராஜ் | -ஈரோடு |
| Mrs.வனிதாசாமுவேல் | -மதுரை | C.ஜாய் கிறிஸ்டினா | -நாகமலை |
| R.பிளசன் | -நாகை | R.ஆனந்தகுமார் | -கடுக்கம்பாளையம் |
| S.சாம் பிச்சை | -மதுரை | A.சேவியர் மேரி | -மதுரை |
| S.சுந்தரி | -சென்னை | | |

## வேதஅறிவுப்போட்டி எண் 70–ன் விடைகள்

10. பலவீனமுள்ளவனைச் -ரோ.14:1
1. பேதுரு -அப்.3:15
2. நிறைவேறிற்று -யோசு.21:45
3. கீழ்ப்படியாமைக்குள்ளே- ரோம.11:32
4. தாவீது -1நாளா.21:24
5. சுன்னத்துக்காரருக்கு -பிலி.3:2
6. மொர்தெகாய் -எஸ்.3:2
7. கர்த்தராகிய இயேசுவின் பிதாவாகிய தேவனை -கொலோ.3:17
8. பாதாளத்தில் -யோபு21:13
9. பூமிக்குரிய -எபி.9:1
10. கர்த்தரை. தேவனுடைய இரட்சிப்பை -சங்.50:23

## பொது அறிவுச் சோதனை

1. ஆபிரகாம் லிங்கன் செய்த சீர்திருத்தம் எது?
அ) நிலசீர்திருத்தம் ஆ) நிறவெறி ஒழிப்பு இ) அடிமைத்தன ஒழிப்பு

2. மின்சார சக்தியை சேமிக்கப் பயன்படுவது எது?
அ)எலக்ட்ரோ மீட்டர் ஆ) அக்யூமுலேட்டர் இ) அம்மீட்டர்

3. இரும்புச் சத்து குறைவால் வரும் நோய் எது?
அ) அனிமியா ஆ) காய்ட்டர் இ) ஸ்கர்வி

4. சில பிராணிகள் செயலற்றிருத்தல் எந்த காலத்தில் நடைபெறும்?
அ) கேடைகாலம் ஆ) வேனிற்காலம் இ) குளிர்காலம்

5. விமான நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த வகையான சுகாதார கேடு விளைகிறது?
அ) கதிரியக்கம் ஆ) சப்தம் இ) காற்று

விடைகள்:
1. அடிமைத்தன ஒழிப்பு
2. அக்யூமுலேட்டர்
3. அனிமியா
4. கோடைகாலம்
5. சப்தம்

நீ அழைக்கிறபோது பதில் அளிக்கிற ஒரு நண்பர் நீ அழைக்கிறதற்கு முன்னே பலமுறையும் பதில் அளிக்கிறார் - *Selected*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியத்தின் பலன்களில் சில...

### வாசகரும் ஊழியருமாகிய சகோதரனுடைய கடிதம்

24.6.06

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. உங்கள் மாத பத்திரிக்கை கிடைத்தது. அதில் உள்ள பகுதிகள் அனைத்தும் சிறப்பாக மற்றும் பிரயோஜனமாக உள்ளது கர்த்தர் தாமே உங்களையும் உங்கள் மாத பத்திரிக்கையையும், சபை ஊழியத்தையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

MAGAZINE

*S.Rajaprasath*
*Madurai*

### டி.வி நேயரின் வாழ்த்துக் கடிதம்

26.6.06

நீங்கள் அளிக்கும் செய்தி மிகவும் நன்றாக இருக்கிறது. நானும் எனது அப்பா,அம்மா,சித்தி, சித்தப்பா, தம்பி ஆகியோர் உங்கள் செய்தியை பார்த்து பயன்அடைகிறோம். இந்த செய்தி மேலும் வளர எங்கள் வாழ்த்துக்கள். கர்த்தர் உங்கள் ஊழியங்களை மென்மேலும் ஆசீர்வதிக்க நாங்களும் ஜெபிக்கின்றோம்.

TELEVISION

*J.Navin*
*Perambalur*

### வானொலி நேயரின் வாழ்த்து

2.6.06

உங்களுடைய செய்தியை புதன் கிழமை 5.45 முதல் 6.00 மணி வரை இலங்கை ஆசியசேவையில் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். தொடர்ந்து நிகழ்ச்சியை கேட்பேன்.

RADIO

*Mr.Daniel*
*Dubai*


ஒரே வழி

**'The One Way'** வேதபாடம்
The Master Course -ஐ அஞ்சல் வழி மூலம் படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 15-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள்.
அத்துடன் 'வேதாகம சபை' என்ற புத்தகத்தையும் பரிசாகப் பெற்றுக்கொள்வீர்கள். வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5, Batlagundu-624 202**
**S.INDIA**

# வேதாகம ஆலோசனை

**"இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதை பொருள்களையும் அறிந்துகொள்வான்" (நீதி.1:4-6)**

## வேதாகம ஆராய்ச்சி பாடம்-3

### 5. நாம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

இந்தக் கேள்வியை சிறைச்சாலைக்காரன் பவுலையும் சீலாவையும் பார்த்துக்கேட்டான். "அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (அப்.16:31,32). நாம் விசுவாசித்தால் போதும் நம் வீட்டாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று இவ்வசனத்தை நாம் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. சிறைச்சாலைக்காரனுடைய வீட்டார் யாவரும் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டனர். கீழ் உள்ள வசனம் 33-ல் வாசிக்கிறோம். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும் தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்.

இந்த சிறைச்சாலைக்காரனைப்போல நாம் இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால் "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம்" (ரோம.14:23) என்று வேதம் போதிக்கிறது. பிலிப்பு மந்திரியை நோக்கி "நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான்" (அப்.8:37,38).

மனந்திரும்புதலும் மிகவும் அவசியமான ஒன்று. "பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான் (அப்.2:38). மனமாற்றமானது நமது மனம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்க வேண்டும். ஏனென்றால் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17) என்ற வசனத்தின்படி புதிதாக பிறந்த குழந்தையைப்போல அவன் மாறவேண்டும். இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்க்கிறார் (அப்.2:47).

# விசுவாசமே நீடிய வாழ்வு

★ உன் விசுவாசம் பெரியது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் - மத்.15:28.

★ விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் - மாற்.9:24.

★ விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் - மாற்.9:23.

★ அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் - யோவா.4:42.

★ என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு - யோவா.5:24

★ நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் - யோவா.6:69.

★ நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன் - யோவா.11:27.

★ காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் - யோவா.20:29.

★ விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது - ரோம.1:16.

★ விசுவாசத்தினாலேயே நீதிமான் பிழைப்பான் - ரோம.1:17.

★ விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் - ரோம.10:17.

★ நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம் - 2கொரி.5:6.

★ கெட்டுப்போக பின் வாங்குகிறவர்களாயிராமல், ஆத்மா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம் - எபி.10:39.

★ விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது - எபி.11:1.

★ விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் - எபி.11:6.

★ இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான் - 1யோவா.5:1.

★ நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் - 1யோவா.5:4.

★ விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம் - எபி.12:1.

***M.Rajamani***

# சந்திப்போம்! சிந்திப்போம்!

உரையாடல் -44 D.எபிநேசர்

**தாவீது:** தேவன் காயீன் ஆபேலிடம் காணிக்கை அல்லது பலி செலுத்தும்படி ஏற்கனவே கூறியிருக்க வேண்டும் என்று நான் கூறுவதற்கு மூன்று வலுவான காரணங்கள் உண்டு.

**யோனத்தான்:** அப்படியா அவை என்ன?

**தாவீது:** ஒன்று ஆபேல் பலி செலுத்தினதைப்போலவே நோவா ஆதி.8:20 ஆபிரகாம் ஆதி.12:8 ஈசாக்கு ஆதி.26:25 யாக்கோபு ஆதி.35:3,7 இவர்கள் அனைவரும் ஒரேமாதிரியாக பலி செலுத்தினார்கள். தேவன் அதை சுகந்த வாசனையாக முகர்ந்து கொண்டார். தேவன் கட்டளையிடாமல் அவர்கள் எப்படி ஒரே மாதிரியாக செலுத்தியிருக்க முடியும்?

**யோனத்தான்:** சரி மற்ற இரண்டு காரணங்கள்.

**தாவீது:** இரண்டாவது தேவன் பரிசுத்தர். லேவி.20:26 ஆதாமின் பாவத்திற்கு பிறகு பாவம் அனைவரையும் ஆண்டுகொண்டது. ரோம.5:14 அவர்கள் தேவனோடு ஒப்புரவாக வேண்டுமானால் பலி செலுத்தி பாவநிவர்த்தி செய்யப்பட வேண்டும். லேவி.17;11 எனவே அவர்கள் பலி செலுத்தும் கட்டளை பெற்றிருக்கக் கூடும். மூன்றாவது அவர்கள் அனைவருமே பலி செலுத்தித் தொழுது கொண்டிருக்கிறார்கள். தொழுகை என்பது தேவனுடைய விருப்பத்தின்படி செய்வது யோவா.4:23,24 எனவே தொழுகைக்குரிய கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். பலி மற்றும் பலிபீடம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே சொல்கிறார். யாத்.20:24-26 எங்கு தொழுது கொள்ள வேண்டும், எப்படித் தொழுது கொள்ளவேண்டும் என்பன எல்லாவற்றையும் அவரே அறிவிக்கிறார். அப்.17:24, யாத்.20:24, யாத்.25:8, 1நாளா.28:10,19, 2கொரி.6:16, யோவா.4:24. ஆகவே இந்தக் காரணங்களினால்தான் தேவன் காயீன் ஆபேலிடம் கட்டளை கொடுத்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் இதை உறுதியாகச் சொல்லும் அதிகாரம் எனக்குக் கிடையாது. இப்படியிருக்கலாம் அவ்வளவுதான்.

**யோனத்தான்:** சரி தாவீது மிக்க நன்றி நாம் விடைபெறும் நேரம் வந்துவிட்டது. உன் மூலமாக இரட்சிக்கப்படுவது எப்படி? அவருடைய சித்தப்படி அவரை ஆராதிப்பது எப்படி? போன்ற பல விஷயங்களை தெளிவாக அறிந்து கொண்டேன். இனி அவருடைய சித்தப்படி முழுமையாக நடந்துகொள்வேன். எனக்காக ஜெபித்துக்கொள்.

**தாவீது:** மிக்க நல்லது யோனத்தான். உன்னோடு தேவனுடைய காரியங்களை இவ்வளவு காலம் பேசியது எனக்கு மிகவும் மகிழ்ச்சி. கர்த்தருக்கு சித்தமானால் நாம் மீண்டும் சந்திப்போம். Good Bye யோனத்தான்.

**யோனத்தான்:** Good Bye தாவீது. ( முற்றும் )

சிறுவர் பகுதி

# இரண்டாவது முறையாக விற்கப்பட்டவன்

**வேதபகுதி: ஆதியாகமம்37:1-39:5**



யோசேப்பு தன் சகோதரர்களாலே மீதியானியரிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் அவனை எகிப்திற்குக் கொண்டு போனார்கள். அவனுக்குத்தான் எவ்வளவு மனக்கஷ்டம் இருந்திருக்கும். தன் குடும்பம், இடம், நண்பர்கள், உறவினர்கள் எல்லாவற்றையும் இழந்தவனாக மீதியானியரின் கையில் ஒரு கைப்பொம்மையாக அவர்களோடு இருந்தான். அவனுக்கு துன்மார்க்கமான செயல் பிடிக்காது. ஆகையால் 17 வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களுடைய துன்மார்க்கத்தை தன் தகப்பனுக்குச் சொல்லிவருவான். அவன் தகப்பனாகிய யாக்கோபோ முதிர் வயதிலே யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் தன் பிள்ளைகள் எல்லாரிலும் யோசேப்பை அதிகமாய் நேசித்து அவனுக்குப் பலவருணமான அங்கிகளை செய்து உடுத்துவான். இதையெல்லாம் கண்ட அவன் சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி விற்றுப்போட்டார்கள்.

தங்களுடைய தவறை மறைக்க ஒரு வெள்ளாட்டு கடாவை அடித்து, யோசேப்பின் அங்கியை இரத்தத்தில் தோய்த்து தங்களுடைய தகப்பனிடத்துக்கு அனுப்பி இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ பாரும் என்று சொல்லச்சொன்னார்கள். யாக்கோபு அதைக் கண்டு, இது என் குமாரனுடைய அங்கிதான், ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, என்று புலம்பினான். அந்த மீதியானியரோ யோசேப்பை எகிப்திலே பார்வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். முதலாவது தன் சகோதரர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். பின்பு அந்த மீதியானியர் போத்திபாருக்கு விற்றுப்போட்டார்கள். இதை கண்ட யோசேப்பு எப்படி மனங்கசந்து அழுதிருப்பான் என்பதை சற்று தியானித்துப்பாருங்கள். கர்த்தர் அவனோடு இருந்தபடியால் அவன் எகிப்து தேசத்திலே உயர்த்தப்பட்டான்.

அப்படியே உங்களோடும் கர்த்தர் இருக்க நீங்கள் விரும்பினால் இந்த யோசேப்பைப் போல துன்மார்க்கத்துக்கு விலகி நலமான காரியத்தைச் செய்யுங்கள். கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. உங்கள் நிமித்தம் உங்களுடைய தேசம், உங்களுடைய வீடு ஆசீர்வதிக்கப்பட யோசேப்பைப் போல மாறுங்கள்.

**மனப்பாட வசனம்**

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே" - சங்.119:9

## வேத அறிவுப் போட்டி எண்.71

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். <u>பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை எழுதவும்.</u>***

1. எப்பட்டணத்தார் லேவியனின் மறுமனையாட்டியை அவமானப்படுத்தினார்கள்?
2. அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து தலைகீழாக விழுந்தான் அவன் யார்?
3. கேதுருமரங்களைப்போல உயரமும், கர்வாலி மரங்களைப்போல் வைரமுமாயிருந்தவர்கள் யார்?
4. இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம் என்ற அப்போஸ்தலன் யார்?
5. என் ஜனங்கள் எதனிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
6. நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி எவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்?
7. அவருடைய நடைகள் எப்படிப்பட்ட நடைகளாயிருந்தது?
8. நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் என்னாவீர்கள்?
9. தீர்க்கதரிசிகள் அபத்தமானதைத் தரிசித்து, பொய்ச்சாஸ்திரத்தை அவர்களுக்குச் சொல்லி, கர்த்தர் உரைக்காதிருந்தும், கர்த்தராகிய ஆண்டவர் உரைத்தாரென்று சொல்லி, அவர்களுக்கு எப்படிப்பட்ட சாந்தைப் பூசுகிறார்கள்?
10. தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு எப்படிப்பட்டது?

## நடப்புச் செய்திகள்

① சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண பணிகளுக்காக மேலும் ரூ1,000 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டிருப்பதாக முதல் அமைச்சர் கருணாநிதி அறிவிப்பு.

② அமெரிக்காவில் மருத்துவ சோதனை செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

③ விண்வெளியில் பறக்க 2-வது இந்தியப் பெண்ணான சுனிதா வில்லியம்ஸ் ஆயத்தமாக உள்ளார்.


④ தபால் மூலம் எம்பில். படிப்பதற்கு இந்த ஆண்டு கடைசி என்பதால் அந்த படிப்பில் சேர மாணவர் கூட்டம் அலைமோதுகிறது.

⑤ தாஜ்மஹால் பகுதியில் விமானங்கள் பறப்பதால் ஏற்படும் அதிர்வுகளால் தாஜ்மஹாலுக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி அந்தப் பகுதியில் விமானங்கள் பறக்க தடை விதிக்க அரசு யோசித்துவருகிறது.

Owned and Published by B. Arjunan from
17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and
Printed by R. Sathiyamoorthi at Bharathi Press,
14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202. Editor : B. Arjunan.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR/DDL/164/2006-2008 Licensed to
Post without prepayment License No. TN/WPP-25/SR/2006-2008
Posted at Batlagundu Post Office on 10th July 2006

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க
அன்புடன் அழைக்கின்றோம்.




கிறிஸ்துவின் சபை
17.2.102-D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம் போன் : 04543 - 263278 செல் : 9443558041
E-mail : thewordofchrist@sancharnet.in

கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை




திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
ஆகிய கிழமைகளில் உங்கள் WIN TV-யில் ஒவ்வொரு வாரமும்
காலை 6-15 முதல் 6-30 மணிவரை பாருங்கள்
மற்றும்



உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவையில்
SW 49 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00
மணிவரை கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041

**தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்**
மாத இதழின் ஆண்டு சந்தா
ஆண்டு சந்தா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-

**Monthly Magazine**

To

From
Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India